

தேனி மாவட்டம் லோயர் கேம்பில் முல்லைப் பெரியார் அணை கட்டிய கர்னல் ஜான் பென்னிகுவிக் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு அவரின் திருவுருவச் சிலைக்கு ஊரக வளர்ச்சி துறை அமைச்சர் ஐ,பெரியசாமி தலைமையில் மாலை அணிவிக்கப் பட்டது. இதில் மாவட்ட ஆட்சித் தலைவர் தெற்கு மாவட்டச் செயலாளர் கம்பம் ராமகிருஷ்ணன் எம்.எல்.ஏ. ஆண்டிபட்டி சட்டமன்ற உறுப்பினர் மகாராஜன், முன்னாள் டெல்லி பிரதிநிதி கம்பம் செல்வேந்திரன, கூடலூர் நகர மன்ற தலைவர் பத்மாவதிலோகன், துறை.கம்பம் நகர் மன்ற தலைவர் வனிதா நெப்போலியன், போடி முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் லட்சுமணன் , தெற்கு மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் வழக்கறிஞர் ஸ்டீபன் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள் கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.



அருப்புக்கோட்டை நகரத்தில் வெள்ளைக்கோட்டை பகுதியில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே. கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் கழக கொடி ஏற்றி வைத்து பொது மக்களுக்கு உணவு மற்றும் இனிப்பு வழங்கினார். உடன் மனைவி ஆதிலட்சுமி, நகர் மன்றத் தலைவர் சிவப்பிரகாசம் சுந்தரலட்சுமி, நகரச் செயலாளர் ஏ.கே.மணி, முன்னாள் சேர்மன் சுப்பாராஜ், தெற்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ஆர்.ரமேஷ், அறங்காவலர் குழு தலைவர் விஜயகுமார் ஆகியோர் இருந்தனர்.

### பொங்கல் திருநாளையொட்டி – தமிழர்களின் பண்பாட்டுப் பெருமைகளை பறைசாற்றும் வகையில்

# “சென்னை சங்கமம் - நம்ம ஊரு திருவிழா” கலை நிகழ்ச்சிகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்!

**சென்னை, ஜன.17–**

**பொங்கல்திருநாளையொட்டிதமிழர்களின் பண்பாட்டுப் பெருமைகளை பறைசாற்றும் வகையில் “சென்னை சங்கமம்நம்ம ஊரு திருவிழா” கலை நிகழ்ச்சிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார்.**

**அதன் விவரம் வருமாறு :-**

முதலமைச்சர்மு.க.ஸ்டாலின்அவர்கள் 13.1.2025 அன்று சென்னை, கீழ்ப்பாக்கம்பெரியார்ஈ.வெ.ரா.நெடுஞ்சாலையில் உள்ள ஏகாம்பரநாதர் ஆலயத் திடலில், தமிழ் மண்ணின் கலைகளைக் களிப்போடு கொண்டாடும் வகையில் சென்னை மாநகரில் பல்வேறு வகையான கலை நிகழ்ச்சிகளுடன்கலைபண்பாட்டுத்துறையின் சார்பில் நடத்தப்படும் “சென்னை சங்கமம் - நம்ம ஊரு திருவிழா”வை தொடங்கிவைத்து, தமிழ்நாட்டின்புகழ் பெற்ற 250 கலைஞர்கள் இணைந்து நடத்திய மாபெரும் இசை, நடன நிகழ்ச்சிகளை பார்வையிட்டார்.

தமிழ்நாட்டின் கலை பாரம்பரியத்தைப் பறைசாற்றும் வகையில் இவ்வரசால் சென்னை சங்கமம் – நம்ம ஊரு திருவிழா நடத்தப்பட்டு வருகிறது. இந்த ஆண்டிற்கான ‘சென்னை சங்கமம் நம்மஊருதிருவிழா’கலைநிகழ்ச்சிகள், பெசன்ட்நகர் எலியட்ஸ் கடற்கரை, திருவான்மியூர்கடற்கரை, ராஜாஅண்ணாமலைபுரம், அரசுஇசைக்கல்லூரிவளாகம், திருவல்லிக்கேணி பாரத சாரணசாரணியர் திடல், கிண்டி கத்திபாரா சந்திப்பு, ஜாபர்கான்பேட்டை மாநகராட்சி விளையாட்டுத் திடல், தியாகராயநகர் நடேசன்பூங்கா, நுங்கம்பாக்கம்மாநகராட்சி விளையாட்டுத் திடல், எழும்பூர் அரசு அருங்காட்சியகம், கீழ்ப்பாக்கம் பெரியார் ஈ,வெ,ரா நெடுஞ்சாலையில் உள்ள ஏகாம்பரநாதர் ஆலயத்திடல், ராயபுரம் ராபின்சன் பூங்கா, பெரம்பூர் முரசொலி மாறன் பூங்கா, அண்ணாநகர் கோபுரப் பூங்கா, கோயம்பேடு ஜெய் நகர்பூங்கா, கே.கே.நகர்சிவன்பூங்கா, வளசரவாக்கம் லேமேக் பள்ளி வளாகம், கொளத்தூர் மாநகராட்சி விளையாட்டுமைதானம், அம்பத்தூர்எஸ்.வி. விளையாட்டுத் திடல் ஆகிய 18 இடங்களில்14.1.2025முதல்17.1.2025வரை நான்கு நாட்கள் மாலை 6.00 மணி முதல் இரவு 9.00 மணி வரை நடைபெறுகிறது.

‘சென்னை சங்கமம்நம்ம ஊரு திருவிழாவில்’ தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களிலிருந்தும் தேர்வு செய்யப்பட்டுள்ள1500க்கும்மேற்பட்டகலைஞர்கள்நையாண்டிமேளம், கரகாட்டம், காவடியாட்டம், புரவியாட்டம், இறை நடனம், தப்பாட்டம், துடும்பாட்டம், பம்பையாட்டம், கைசிலம்பாட்டம், ஒயிலாட்டம், தேவராட்டம், சேவையாட்டம், கோலாட்டம், ஜிக்காட்டம், ஜிம்பளா மேளம், பழங்குடியினர் நடனம், சிலம்பாட்டம், மல்லர் கம்பம், வில்லுபாட்டு, கணியன்கூத்து, தெருக்கூத்து, பாவைக்கூத்து, தோல்பாவைக்கூத்து, நாடகம், கிராமிய ஆடல், பாடல் உள்ளிட்ட 50க்கும்மேற்பட்டநாட்டுப்புறகலைநிகழ்ச்சிகள் நடத்தப்படும். இத்துடன் புகழ் பெற்ற செவ்வியல் மற்றும் மெல்லிசை கலைஞர்களின் கலை நிகழ்ச்சிகளும், கேரளாவின் தைய்யம் நடனம், மகாராஷ்டிராவின்லாவணிநடனம், ராஜஸ்தான் கூமர் நடனம், மேற்கு வங்காளம் தனுச்சி நடனம், கோவாவின் விளக்கு நடனம், உத்ராகண்ட்டின் சபேலி நடனம்ஆகியஅயல்மாநிலகலைநிகழ்ச்சிகளும் நடைபெறுகின்றன.

சென்னை சங்கமம் நம்ம ஊரு திருவிழாநிகழ்ச்சியைத்தொடர்ந்துகோயம்புத்தூர், மதுரை, திருச்சிராப்பள்ளி, சேலம், தஞ்சாவூர், திருநெல்வேலி, காஞ்சிபுரம்மற்றும்வேலூர்ஆகியஎட்டு நகரங்களிலும் இந்த ஆண்டு சங்கமம் நம்மஊருதிருவிழாகலைநிகழ்ச்சிகள் நடத்தப்படுகிறது.

விழாநடைபெறும்இடங்களில்தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் மக்கள் விரும்பிஉண்ணும்பலஉணவுவகைகளைக்கொண்டஅரங்குகள்அமைத்து உணவுத்திருவிழாவும், பூம்புகார் நிறுவனத்தின் சார்பில் தமிழ்நாட்டின் புகழ் பெற்ற கைவினைப் பொருட்களைக் காட்சிப்படுத்திவிற்பனைசெய்யும்அரங்குகளும்அமைக்கப்படஉள்ளன. தமிழ்நாட்டின் பாரம்பரிய விளையாட்டுக்களை விளையாடி மகிழும் வாய்ப்புகளையும் பார்வையாளர்களுக்கு வழங்கிட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த விழாவில், நிதி மற்றும் மனித வள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, பெருநகரசென்னைமாநகராட்சிமேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் திருமதி கனிமொழி, கலாநிதிவீராசாமி, திருமதிதமிழச்சிதங்கபாண்டியன், சட்டமன்ற உறுப்பினர்கள் இ.பரந்தாமன், மரு.நா.எழிலன், வி.ஜி.ராஜேந்திரன், த.வேலு, எம்.கே.மோகன், துணைமேயர்மு.மகேஷ் குமார், பெருநகரசென்னைமாநகராட்சி நிலைக்குழு தலைவர் நே.சிற்றரசு, தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றத்தின் தலைவர் வாகை சந்திரசேகர், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள்துறைஅரசுமுதன்மைச்செயலாளர் டாக்டர் பி.சந்தர மோகன், கலை பண்பாட்டுத் துறை இயக்குநர் சே.ரா. காந்தி உள்ளாட்சிஅமைப்புகளின்பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### சிறுமதியாளர்கள் சுருக்க நினைத்தாலும்

# பேரறிவால் பொலிகிறார் அய்யன் வள்ளுவர்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பதிவு!

சென்னை, ஜன. 17 -

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், ஒடிசாவில் பூரி கடற்கரையில் வரையப்பட்ட அய்யன் திருவள்ளுவரின் பேரறிவு சிலையின் மணற் சிற்பத்தை மேற்கோள் காட்டி வெளியிட்ட சமூக வலைதளப் பதிவு வருமாறு:

**சிறுமதியாளர்கள் சுருக்க நினைத்தாலும் பேரறிவால் பொலிகிறார் அய்யன் வள்ளுவர்.**

**“மேலிருந்தும் மேலல்லார் மேலல்லர்**
**கீழிருந்தும்**
**கீழல்லார் கீழல் லவர்.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.




### யு.ஜி.சி. நெட் தேர்வு ஒத்தி வைப்பு – இனியாவது

# மக்கள் உணர்வுகளை மதித்து முடிவு எடுப்பார்கள் என நம்புவோம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பதிவு!

சென்னை, ஜன. 17 –

UGC NET தேர்வு ஒத்திவைக்கப் பட்டது தொடர்பாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:

UGC NET தேர்வுகளை வேறொரு நாளுக்கு மாற்றிட வேண்டும் என்று ஒன்றியக் கல்வி அமைச்சருக்குக் கடிதம் எழுதியிருந்தேன்.

தற்போது அத்தேர்வு ஒத்திவைக்கப்பட்டிருப்பது சரியான முடிவு!

**தமிழ்ப் பண்பாட்டுத் திருநாட்களின்போது முக்கியத் தேர்வுகள் நடைபெறும் என ஒன்றிய அரசு அறிவிப்பதும், மாநில அரசின் தலையீட்டுக்குப் பின்னர் அது ஒத்திவைக்கப் படுவதும் வாடிக்கையாகிவிட்டது.**

**இனியாவது நாட்டில் செயல்படும் எந்தவொரு அமைப்பும், நமது நாட்டின் பன்முகத்தன்மையையும் இங்கு வாழும் அனைத்துத் தரப்பு மக்களின் உணர்வுகளையும் மதித்து முடிவுகளை எடுப்பார்கள் என நம்புவோம்!**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.



பொங்கல் திருநாளை முன்னிட்டு தூத்துக்குடி மாநகரம் 19வது வார்டுக்கு உட்பட்ட மகிழ்ச்சிபுரம் பகுதியில் நடைபெற்ற விழாவில் தையல் இயந்திரங்கள், மாற்றுத்திறனாளிகளுக்கு மூன்று சக்கர வாகனம் உள்ளிட்ட நலத்திட்ட உதவிகளை சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் பெ.கீதா ஜீவன் வழங்கினார். உடன் மாநகர தி.மு.க. செயலாளர் ஆனந்தசேகரன், மாவட்ட துணைச் செயலாளர் ராஜ்மோகன் செல்வின், மாமன்ற உறுப்பினர் திருமதி Dr.சோமசுந்தரி, வட்டச் செயலாளர் திருமதி. பத்மாவதி, மாநகர இளைஞரணி துணை அமைப்பாளர் செல்வின், அமிர்தலிங்கம் வட்டப் பிரதிநிதிகள் செபஸ்டியால், மேகநாதன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# காரைக்குடியில் சிவகங்கை மாவட்ட கழக செயற்குழு கூட்டம்!

## அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் அறிவிப்பு!

*சிவகங்கை, ஜன. 17 -*

சிவகங்கை மாவட்ட கழக செயற்குழு கூட்டம். இன் று17ம்தேதி காரைக்குடியில் நடைபெறுகிறது.

இது குறித்து மாவட்ட கழக செயலாளரும் , கூட்டுறவுத் துறை அமைச்சருமான கேஆர்.பெரியகருப்பன் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது.

இன்று (17.01.2025 - வெள்ளிக்கிழமை) சிவகங்கை மாவட்ட கழக செயற்குழுக் கூட்டம் காரைக்குடியில் தலைவர் கலைஞர் பவளவிழா மாளிகையில் பசும்பொன் தா. கிருட்டிணன் அரங்கத்தில் காலை 10.00 மணி அளவில் நடைபெறுகிறது.

மாவட்ட அவைத் தலைவர் வழக்கறிஞர் அ.கணேசன் தலைமையில் கூட்டம் நடைபெறுகிறது.

எனவே இக்கூட்டத்தில் மாவட்டக் கழக நிர்வாகிகள், செயற்குழு , பொதுக்குழு உறுப்பினர்கள் , ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், சார்பு. அணி நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

கூட்டத்தில் விவாதிக்கும் பொருட்கள்.

1.தமிழ்நாடு முதலமைச்சர் கழகத்தலைவர் தளபதி அவர்கள் 21,22ஆகிய தேதிகளில் சிவகங்கை மாவட்டத்திற்கு வருகைதருவது வரவேற்பு குறித்து.

2. கழக வளர்ச்சி பணிகள்.

இத்தகவலை மாவட்ட கழகச் செயலாளரும், அமைச்சருமான கேஆர். பெரியகருப்பன் தெரிவித்து உள்ளார்.





தூத்துக்குடி தெற்கு மாவட்ட செயலாளரும் மீன்வளம் மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் தமிழர் திருநாளை முன்னிட்டு தை பொங்கல் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு வாழ்த்துக்களை தெரிவித்தார் உடன் மாநில வர்த்தக அணி இணைச் செயலாளர் எஸ்.ஆர்.எஸ்.உமரி ஷங்கர்,மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் பை.மூ. ராமஜெயம்,முன்னாள் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் பில்லாஜெகன், ஒன்றிய செயலாளர் செங்குழி ரமேஷ் சதீஷ்குமார், இசக்கி பாண்டியன் திருச்செந்தூர் நகரச் செயலாளர் வாள்சுடலை, விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் ஜனகர் விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர்கள் ஆனந்த ரோட்டரிகோ, பாக்யராஜ், முன்னாள் கூட்டுறவு வங்கி தலைவர் அசாப் மாவட்ட பிரதிநிதி ஜெயபிரகாஷ், காயல்பட்டினம் நகராட்சி கவுன்சிலர் சுகு மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் செல்வகுமார், திருச்செந்தூர் கவுன்சிலர் சுதாகர் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் , சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், சிறாவயல் கிராமத்தில், பொங்கல் திருநாளை முன்னிட்டு, நடைபெற்ற மஞ்சுவிரட்டு விழாவினை நேற்று (16.01.2025) கொடியசைத்து துவக்கி வைத்தார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ஆஷா அஜித், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஆஷிஸ் ராவத், காரைக்குடி சட்டமன்ற உறுப்பினர் எஸ்.மாங்குடி , தேவகோட்டை சார் ஆட்சியர் ஆயுஷ் வெங்கட் வட்ஸ், மாவட்ட வருவாய் அலுவலர் மரு.எஸ்.செல்வசுரபி உட்பட பலர் உள்ளனர்.